**தமிழ்நாடு பள்ளிக்கல்வி இயக்குநர் அவர்களின் செயல்முறைகள், சென்னை–6**

ந.க.எண்.058783 / எம்/இ1/ 2019 , நாள்.01.11.2019

**பொருள் :** பள்ளிக் கல்வி – தந்தை பெரியார் அவர்களின் பிறந்த நாள் விழா– "பெரியார் 1000 வினா– விடைப் போட்டி " – 6ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ/ மாணவியர்கள் கலந்து கொள்ள பள்ளிகளுக்கு உரிய ஆணை வழங்க கோரியது– அனுமதி அளித்தல்– சார்பு.

**பார்வை:** தஞ்சாவூர் பெரியார் சிந்தனை உயராய்வு மய்யம் கடிதம் எண்.018/பெ.ம.அ.தொ.நி/பெ.சி.உ.ம/ நாள்.22.10.2019

******

பார்வையில் காணும் தஞ்சாவூர் பெரியார் சிந்தனை உயராய்வு மய்யம் கடிதத்தின்படி, தந்தை பெரியார் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு தந்தை பெரியாரின் வாழ்க்கை வரலாற்றை பள்ளி மாணவர்கள் அறிந்து கொள்ளும் வகையிலும் , மாணவர்களின் அறிவியல் மற்றும் சமூகவியல் சிந்தனைகளை வளர்க்கும் வகையிலும் திட்டமிடப்பட்டு பெரியார் மணியம்மை அறிவியல் மற்றும் தொழில்நுட்ப நிறுவனம் (நிகர்நிலை பல்கலைக்கழகம்) சார்பில் அனைத்துவகை பள்ளிகளில் 6ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் பள்ளி மாணவர்களுக்கான "பெரியார் 1000" எனும் மாபெரும் வினா–விடைப்போட்டியினை நவம்பர் 2019 மாதத்தில் நடத்திடவும், இப்போட்டியில் கலந்து கொள்ள விரும்பும் மாணவர்கள் தங்களது பெயரினை பதிவு செய்திட வேண்டும் எனவும், நவம்பர் 2019 மாதத்தில் விடுமுறை நாட்களில் (சனி, ஞாயிறு) நடைபெறும் இப்போட்டியில் பங்குபெறும் ஒவ்வொரு பள்ளிக்கும் மூன்று பரிசுகள் வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே , இப்போட்டி தேர்வில் அனைத்து பள்ளி மாணவர்களும் கலந்து கொண்டு பயன்பெற்றிடும் வகையில் அனைத்து பள்ளி தலைமை ஆசிரியர்களுக்கும் அறிவுறுத்துமாறு அனைத்து மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

பள்ளிக்கல்வி இயக்குநர்

01/11/19

**பெறுநர்**

அனைத்து மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலர்கள்

**நகல்**

நம்.சீனிவாசன்
இயக்குநர்
பெரியார் சிந்தனை உயராய்வு மய்யம்,
பெரியார்நகர் ,
வல்லம், தஞ்சாவூர்– 613 403